## மாநகர மேம்பாட்டு பெருந்திட்டத்தில் விவேகானந்தா ஆசிரமம் இடம் பெறாது:

# பாரம்பரிய சின்னமாக என்றும் நிலைபெறும்

கோலாலம்பூர், மார்ச் 31-

நாட்டின் பழம் பெரும் கட்டடங்களில் ஒன்றான பிரிக்பீல்ட்ஸில் உள்ள விவேகானந்தா ஆசிரமம் ஒரு பாரம்பரிய வரலாற்று சின்னமாக மாநகர மன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டிருப்பதால் அதில் எந்த ஒரு மாற்றமும் மேம்பாட்டு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட முடியாது என்று துணை அமைச்சர் எம்.குலசேகரன் நேற்று தெரிவித்தார்.




அப்படி ஏதாவது மேம்பாட்டுத் திட்டங்கள் மேற்கொள்ளப்படுமானால் அது ஒரு பாரம்பரிய சின்னம் என்ற அக்கட்டடத்தின் அந்தஸ்த்திற்கு முரணாக விளங்கும் என்றார் அவர்.

நேற்று இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியதாவது: -

விவேகானந்தா ஆசிரமம் குறித்து நாடாளுமன்றத்தில் தேசிய பாரம்பரிய இலாகாவின் துணை தலைமை இயக்குநர் தோ புவான் மூடா பின் பஹாடினுடனும், தேவகுஞ்சரி சம்பந்தனுடனும் ஒரு சந்திப்பை நடத்தினேன்.

விவேகானந்தா ஆசிரமமும் அது அமைந்துள்ள நிலமும் 2005 ஆம் ஆண்டில் தேசிய பாரம்பரிய சின்ன சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்பதை அறிந்து நான் மகிழ்ச்சி அடைந்தேன்.

இதன் அடிப்படையில் அங்கு எந்த ஒரு மறு மேம்பாடும் மேற்கொள்ளப்படாது. அப்படி ஒன்று அனுமதிக்கப்படாது. மேலும் அந்த கட்டடத்தின் உள்ளும் வெளியிலும் எந்த ஒரு மாற்றங்களும் மேற்கொள்ளப்பட முடியாது.

அப்படியே அந்த கட்டடத்திற்கு புதிய வர்ணம் பூச முற்பட்டால் கூட சட்டப்படி பாரம்பரிய சின்ன ஆணையரிடம் அனுமதி பெற வேண்டும். அதே நேரத்தில் அந்த கட்டடத்தின் 200 மீட்டர் சுற்றளவில் எந்த பணிகளை செய்தாலும் கூட அதற்கும் ஆணையரின் அனுமதி வேண்டும்.

இந்நிலையில் மேலவையில் செனட்டர் டத்தோ டாக்டர் நெல்சன் ரெங்கநாதன், விவேகானந்தா ஆசிரமம் பற்றி ஒரு கேள்வியை எழுப்பினார். விவேகானந்தா ஆசிரமம் ஒரு பாரம்பரிய வரலாற்று சின்னம் என்று பதிவு செய்யப்பட்டிருக்கின்ற நேரத்தில் 2040 ஆம் ஆண்டுக்கான கோலாலம்பூர் பெருந் திட்டத்தில் இந்த இடமும் இடம் பெற்றிருப்பது ஏன்? என்ற கேள்வியை எழுப்பியிருந்தார்.

கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் சார்பில் அதற்கு நான் பதில் அளித்தேன். விவேகானந்தா ஆசிரமம் ஒரு பாரம்பரிய சின்னமாக பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

மாநகர மன்றத்தின் 2040 ஆம் ஆண்டின் திட்டத்தில் ஒரு மேம்பாட்டுக்கான இடமாக அது உள்ளடக்கப்படவில்லை.

மாறாக அங்குள்ள கட்டடங்கள் என்ன என்ற விவரம் தான் இடம் பெற்றிருக்கிறது. உதாரணமாக சுல்தான் அப்துல் சமாட் கட்டடம், கார்கோசா ஸ்ரீ நெகாரா, அரச சிலாங்கூர் கிளப் உட்பட மற்ற கட்டடங்களை போல விவேகானந்தா ஆசிரமம் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரிக்பீல்ட்ஸில் உள்ள எந்தெந்த நிலங்களை பயன்படுத்தலாம் என்பது மீதான ஆய்வில் அங்குள்ள கட்டடங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால் விவேகானந்தா ஆசிரமம் மாற்றப்படாது; அகற்றப்படாது அது ஒரு பாரம்பரிய சின்னமாக நீடித்து நிலைத்து இருக்கும்.

அங்கே எந்த ஒரு மறு மேம்பாடும் எந்த ஒரு நிர்மாணிப்பும் நடத்தப்பட முடியாது என்பது தான் உண்மை என்று அவர் தமது அறிக்கையில் கூறினார்.